பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 22 ஞாயிற்றுக்கிழமை 15.10.2023 கதிர் 338

## புலிபாய்ந்த கல்லில் அத்துமீறி கடற்றொழில் வாடி அமைப்பு

### நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தயக்கம்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டம், கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதியிலமைந்துள்ள புலிபாய்ந்த கல் கடற்கரையைஅண்டிய பகுதியில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களால் அத்துமீறி மீன் வாடிகள் ஒகஸ்ட் மாதம் அமைக்கப்பட்டன. இரண்டரை மாதங்களாகியும் அவற்றை அகற்ற அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று உள்ளூர்மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். ☞ 2

## தொடருந்து மோதி 17 மாடுகள் இறப்பு

### கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவில்தொடருந்து மோதியதில் 17 கால்நடைகள் அநியாயமாக உயிரிழந்தன.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று மாலை 3 மணியளவில் கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி தொடருந்து மோதியே கால்நடைகள் அனைத்தும் இறந்தன. இந்தப் பரிதாபகரச் சம்பவத்தில் 11 பசு மாடுகளும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை இன்று நடைபெறுகின்றது. இதில் வடமாகாணத்தில்இருந்து18ஆயிரத்து 759மாணவர்கள்தோற்றுகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் உள்ள ஐந்துமாவட்டங்களிலும்71இணைப்பு நிலையங்களும் 209 பரீட்சை மண்டபங்களும்செயற்படுகின்றன.

யாழ்ப்பாணம் 01 வலயத்தில் 12 இணைப்பு நிலையங்களின் கீழ் 41 பரீட்சை நிலையங்களில் 3 ஆயிரத்து 782 மாணவர்கள் பராட்சைக்குத்தோற்றும்அதேநேரம் யாழ்ப்பாணம் 02 வலயத்தில் 10 இணைப்புநிலையங்களின் கீழ் 54 பரீட்சைநிலையங்களில் 5 ஆயிரத்து 208 மாணவர்கள் பராட்சைக்குத் தோற்றுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 இணைப்புநிலையங்களின் கீழ் 28 பரீட்சைநிலையங்களில் 2ஆயிரத்து 219மாணவர்களும்,முல்லைத்தீவில் 09இணைப்புநிலையங்களின் ☞ 2

## அத்துமீறி மீன்பிடித்த 5 படகுகள் மாட்டின

### 28 மீனவர்களும் கைது



(ந.லோகதயாளன்.)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட ☞ 2

## மோதலுக்குப் பின்னான பிரச்சினைகளுக்கு தீர்வு காண பிரித்தானியா உதவி வழங்கும்

### அந்நாட்டு அமைச்சர் கொழும்பில் தெரிவிப்பு

மோதலுக்கு பின்னரான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கும், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், சமூகங்களுக்கு இடையில் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும்அவசியமான உதவிகளைபிரித்தானியா தொடர்ந்து வழங்கும் என்று சுட்டிக்காட்டியுள்ள பிரித்தானியாவின் இந்து - பசுபிக் பிராந்திய வெளிவிவகார, பொது நலவாய மற்றும் அபிவிருத்திஅமைச்சர்ஆன்-மேரி ட்ரெவெல்யான்,

நிலையானதும்,அனைவரையும் உள்ளடக்கியதுமான சமாதானத்தை உறுதிசெய்வதன் மூலமே உறுதியானஇலங்கையைக் கட்டியெழுப்பமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற இந்து சமுத்திரகரையோரநாடுகள் அமைப்பின் 23ஆவது அமைச்சர்மட்டக்கூட்டத்தில் பங்கேற்பதற்காகநாட்டுக்கு வருகை தந்த பிரித்தானியாவின்இந்து-பசுபிக் பிராந்திய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ஆன்-மேரிட்ரெவெல்யான், இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு, எதிர்கால ஒத்துழைப்புசார் திட்டங்கள், இலங்கை முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உதவிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் 'பைனான்ஸியல்டைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கியிருக்கும்நேர்காணலிலேயேஇவற்றைத் ☞ 8

# நாகை - காங்கேசன் துறைகள் இடையே பயணிகள் கப்பல் சேவை தொடங்கியது

### 50 பேருடன் வந்த கப்பலுக்கு அமோக வரவேற்பு





(ந.லோகதயாளன்.)

இந்தியா - இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவை தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறைக்கு இடையில் நேற்று உத்தியோகபூர்வமாகத் தொடங்கியது. முதல் பயணத்தில்இந்தியாவிலிருந்து50பயணிகள் ☞ 2

## தென்னந் தோட்டங்களுக்கள் புகுந்த யானைகள் துவம்சம்

### நூற்றுக்கு மேற்பட்ட மரங்கள் அழிவு





(சண்முகம்தவசீலன்)

முல்லைத்தீவுமாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் கிராமத்திற்குள் புகுந்தகாட்டு யானைகள் மக்களின் வாழ்வாதார பயிரான தென்னை மரங்களை ☞ 2

## புலிகளின் ஆயுதங்களை தேடிய வேட்டை தோல்வி



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்களைத் தேடி சம்பூரில் நடத்தப்பட்ட தேடுதல்வேட்டைதோல்வியில் முடிவடைந்தது.

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விடுதலை புலிகளின் ஆயுதக் கிடங்கு இருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்நீதிமன்ற அனுமதியுடன் இந்தத் தேடுதல் வேட்டை இடம்பெற்றது. ஆனால் ஆயுதங்கள் எவையும் அங்குகிடைக்கவில்லை.

மூதூர் நீதி ☞ 2

## இனி இது .....

கீழ் 24 பரீட்சை நிலையங்களில் 2 ஆயிரத்து 162 மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் 14 இணைப்புநிலையங்களின்கீழ் 34 பரீட்சைநிலையங்களில் 3 ஆயிரத்து 212 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் அதேநேரம் மன்னாரில் 16 இணைப்பு நிலையங்களின் கீழ் 28 பரீட்சை நிலையங்களில் 2 ஆயிரத்து 176 மாணவர்கள் தோற்றுகின்றனர் .

இது அரசு நடத்தும் பொதுப் பரீட்சை. இலங்கையில் பாடசாலைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் இந்தப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படவேண்டும். ஆனால், யாழ்ப்பாணம் தீவக வலயத்தில் இருந்து தரம் 5இன் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் இரு மாணவர்கள் இந்தப் பரீட்சையைஎழுதஅந்தப்பாடசாலை அதிபர் ஒழுங்கு செய்யவில்லை என்கிற விவரம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அந்த இரு மாணவர்களும் பரீட்சையைநன்குஎழுதுவதற்கான வாய்ப்புக்கள்இல்லைஎன்றுகருதிய அதிபர் அவர்களுக்குப் பரீட்சைக்கு விண்ணப்பமே போடவில்லை.

ஒக்டோபர் கடந்த 5 ஆம் திகதிக்கு பின்பே மாணவர்களின பெற்றோருக்குத் தமது பிள்ளைகள் பரீட்சை எழுத விண்ணப்பமே போடப்படவில்லை என்கிற விவரம் தெரியவந்துள்ளது. பெற்றோர் இந்த விடயத்தை ஊடகவியலாளர் ஒருவருன் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். அவர் மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குவிடயத்தைக்கொண்டு சென்றுள்ளார்.

இதையடுத்து இந்தப் பிரச்சினை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான ஒழுங்குகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த இரு மாணவர்கள் பரீட்சை எழுதாமல் போனால் பாடசாலை அதிபர் இடைநிறுத்தப்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பது குறித்தும் திணைக்களத்தால் அதிபருக்கு எச்சரிக்கப்பட்டது.

இதையடுத்து பாடசாலை அதிபர் மத்திய கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றிற்குத் தானே நேரில் சென்று விண்ணப்பங்களைக் கையளித்து அவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகளையும் கையோடு எடுத்து வந்திருக்கிறார்.

புலமைப் பரிசில் பரீட்சையில் எல்லா மாணவர்களும் சித்தியடைவதில்லை. அரசு வைத்துள்ள வரையறைக்கு ஏற்ப ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வெட்டுப்புள்ளிகளை அறிவித்து அதற்கு மேல் பெற்றவர்கள் வெற்றி பெற்றவர்கள் என்று அறிவிப்பதே வழமை. இருப்பினும் ஏனைய மாணவர்கள் எல்லோருமே அந்தப் பரீட்சையை எழுதுகிறார்கள். அப்படியிருக்கும்போது இரண்டு மாணவர்களுக்கு மட்டும் அந்த உரிமை மறுக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்லத்தான்.

இதுபோன்றசில்லறைத்தனமான வேலைகளால்பாடசாலையின்சித்தி விகிதத்தை அதிகரித்துக்காட்டி இந்தச் சமூகத்திற்குக் கிடைக்கப்போகும் நன்மை எதுவும் இல்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாகை - காங்கேசன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம்வந்தனர். இங்கிருந்து 30 பேர் தமிழ்நாடு சென்றனர்.

நாகபட்டினத்திலிருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் புறப்பட்ட கப்பல் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையை பகல் 12 மணியளவில் வந்தடைந்தது.

செரியாபாணி என்று பெயரிடப்பட்ட இந்தப் பயணிகள் கப்பலை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ், இலங்கையின் விமான சேவைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் மற்றும் வடக்கு மாகாண சுற்றுலா அதிகார சபையின் தலைவர் அ.பத்திநாதன் உள்ளிட்டோரும் வரவேற்றனர். .

மாணவர்களின் இன்னிசை அணிவகுப்பு மற்றும் மங்கள இசையுடன் கப்பல் வரவேற்கப்பட்டது. கப்பலில் வந்த அனைவரும் பூங்கொத்து கொடுத்து வரவேற்கப்பட்டனர்.

நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் சேவையை காணொலிக்காட்சி மூலம் டெல்லியிலிருந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்திருந்தார்.

'' கிட்டத்தட்ட விமான பயணத்திற்குரிய கட்டணம் அறவிடப்பட்டபோதும், 4 மணி நேர கப்பல் பயணத்தில் அருந்துவதற்கு ஒருதேநீரோ அல்லது பானமோ கூடக் கப்பலில் தரப்படவில்லை என்று பயணிகள் கவலை தெரிவித்தனர்.

## அத்துமீறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவரகள் 28 பேர் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கப் புறப்பட்ட இரு படகுகளும் இலங்கையின் மன்னார் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் 15 மீனவரகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்கள் அனைவரும் மன்னார் இறங்கு துறைக்குகொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இன்று நீதவான் முன்னிலையில் ஆயர் செய்யப்படவுள்ளனர்.

மேலும் 3 படகுகளில் பயணித்த 13 மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 13 பேரும் நேற்றுக் காலை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## புலிகளின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான் மன்ற பதில் நீதவான் முன்னிலையில் இடம் பெற்ற அகழ்வுப்பணியில்திருகோணமலை தடய வியல் பொலிஸாரும் இணைந்திருந்தனர். குறித்த பகுதியில் சுமார் 12 அடி தோன்றப்பட்டபோதும் எதுவும் கிடைக்கவில்லை மீண்டும் இயந்திரத்தை கொண்டு குறித்த கிடங்கை மூடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## புலிபாய்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேயிடத்தில் மீண்டும் புதிய வாடிகள்அமைக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டதகவலையடுத்து அவ்விடத்திற்கு சென்று நிலவரங்களை பார்வையிட்டார் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

புலிபாய்ந்த கல் கடற்கரையை அண்டியபகுதியில்பலஏக்கர்காணிகள் சிறு தானிய பயிர்ச்செய்கைக்காக தமிழ் மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. அவற்றைத் தற்போது வன இலாகா கையகப்படுத்தியுள்ளது.

கடற்கரை பகுதியில் தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக தொழில் செய்து வருகிறார்கள்.

அப் பகுதியில் இரண்டரை மாதத்திற்குமுன்னர் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் எந்த அனுமதியும் பெறாது அத்துமீறி வாடி அமைத்தார்கள். அங்கிருந்தே தொழில் செயது வருகிறார்கள். இது குறுத்து கொக்குதொடுவாய் மீனவர் அமைப்பும் அங்கு தொழில் செய்யும் தமிழ் மீனவர்களுமாக கிராம சேவையாளர் அவர்களுக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டதோடு எனக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தார்கள்.

அவ்விடத்திற்கு சென்று பார்வையிட்ட போது கிராம சேவையாளரால் அவ் வாடிகளை அகற்றும்படியும் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறி சென்றார். ஆனால் சட்டத்தை மீறி அனுமதியின்றி அமைக்கப்பட்ட வாடி பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களால் இதுவரை அகற்றப்படவில்லை.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் அந்த வாடிகளை அகற்றும்படிபணித்து அந்த இடத்தில் பதாகைகாட்சிபடுத்தப்பட்டுஇருந்தது. ஆனால் இருந்த வாடியை விட இன்னுமொரு வாடியும் இப்போது அங்குபுதிதாகஅமைக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு வாடி அங்கே அமைக்கப்பட்டு வருகின்றன.

சட்டவிரோத வாடிகள் 28 நாட்களுக்குள் அகற்றப்பட வேண்டும் என்றபோதும் இரண்டரை மாதமாகியும் அவை அகற்றப்படவில்லை. இதனை அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்டி நீங்கள் எடுத்த நடவடிக்கை போதாது என்பதனையும் தெரியப்படுத்தியிருந்தேன். உடன் நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் எங்களுக்குத் தெரிவிக்கிறார்களே தவிர, எதுவும் நடப்பதாக இல்லை.

தற்போது வாடி அமைக்கப்படும் இடத்திற்குஅருகே புத்தபிக்குஒருவர் தலைமையில் 300 குடும்பங்கள் குடியேற்றப்பட இருப்பதாக அங்கு வாடி அமைத்துள்ள மீனவர்களில் ஒருவர் உள்ளூர் மீனவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இத்தகைய நிலையில் அதிகாரிகள் அத்துமீறிய வாடிகளை அகற்றத் தயங்குவது பிரச்சினைகளை இன்னும் விரிவாக்கப்போகின்றது - என்றார்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 நாம்பன் மாடுகளுமாக மொத்தம் 17 மாடுகள் உயிரிழந்துள்ளன கால்நடை உரிமையாளரின் அசமந்த போக்கு காரணமாகவே 17 மாடுகளும் அநியாயமாகத் தொடருந்தில் மோதுண்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியைச் சேரந்த கால்நடைப் பண்ணையாளர்களின் மாடுகளே இந்த விபத்தில் உயிரிழந்தன. சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தென்னந் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழித்துள்ளன.

வெள்ளியிரவு கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைகள் தோடங்களுக் குள் புகுந்து துவம்சம் செய்துள்ளன. இதனால்

தென்னைப் பயிர்ச் செய்கையையே வாழ்வாதாரமாக மேற்கொண் டுவரும் தெங்கு செய்கையாளர்யேள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்குத்தொடுவாய் வடக்கு கிராமத்தில் தெங்கு செய்கையினை மேற்கொண்டுவரும் இராசேந்திரம் மற்றும் சிவலிங்கம் ஆகிய இருவரின் தென்னந் தோட்டங்களுக்குள் புகுந்தே யானைகள் இந்த அட்டகாசத்தைப் புரிந்துள்ளன.

இருவரின் தோட்டங்களுக்குள்ளும் சுமார் 110 தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ள என்று கணக்கிடப்பட்டுள்ளது.

காய்த்துக்கொண்டி ருக்கும் மரங்களையும் தள்ளிவிழுத்தி அதில் இருந்த தேங்காய் களையும் யானைகள் சாப்பிட்டுள்ளன. பல தென்னங்கன்றுகளையும்முற்றாகத் துவம்சம் செய்துள்ளன.

தென்னம்பயிர்ச்செய்கையையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள தமக்கு யானைகள் இப்படி அவ்வப்போது வந்து அழிவை ஏற்படுத்துவதால் பெரும் பாதிப்பு ஏற்படுவதாக விவசாயிகள் இருவரும் தெரிவித்தனர். வேலிகளைச் சேதப்படுத்தி தென்னந்தோட்டத்திற்குள் புகுந்து கொள்ளும் யானைகளால் தங்கள் வாழ்வாதாரம்பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். தற்போதைய பொருளாதார நெருக்கடி, விலையேற்றத்தினால் தோட்டங்களை மீண்டும் சீர்செய்ய முடியாத நிலைக்குத் தாங்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

யானைகளினால் ஏற்படும் இவ்வாறான இழப்புக்களுக்கு அரச உதவிகள் வழங்கப்படவேண்டும் என்பதுடன் சரியான முறையில் யானை வேலிகளை அமைத்துக் கொடுத்து தெங்கு செய்கையாளர்களைப் பாதுகாக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

உயர்கல்வித்துறையின் 49 வருட கால அனுபவத்தினைக் கொண்ட முன்னோடி நிறுவனமான IDM Campus தனது வடபிராந்தியத்தின் புதிய கிளையினை யாழ் மாநகரில் ஆரம்பித்து உள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.




HND
SOFTWARE ENGINEERING
Duration :- 18 - 24 Months

பட்டதாரி ஆக வேண்டும் என்ற உங்கள் கனவை IDM உடன் இணைந்து நனவாக்கி கொள்ளுங்கள்

புதிய பிரிவு ஆரம்பம்
24.10.2023
காலை 10:00மணி

மேலதிக விபரங்களுக்கு
(+94) 76 655 2832
(+94) 21 222 5397

AFFILIATIONS & PARTNERS
UNIVERSITY OF GLOUCESTERSHIRE · Pearson · othm · QUALIFI

IDM
Veerasingam Hall ,1St Floor
No,12,K.K.S.Road,Jaffna
www.idm.edu

காலைக்கதிர்
Kalaikkathir

# இரட்டை நிலைப்பாடு கொண்டவர்களால் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்காதாம்

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ரங்கன் கூறுகிறார்

இரட்டை நிலைப்பாடு கொண்டவர்களால் தமிழ் மக்களுக்கு எவ்விதமான தீர்வுகளையும் பெற்றுக்கொடுக்க முடியாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்–

தற்போது ஹர்த்தால் அனுஸ்டிக்கப் போவதாக சில கட்சிகள் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றன எனத் தகவல்கள் வருகின்றன.

உண்மையில் மனிதச் சங்கிலி, ஹர்த்தால் போன்ற போராட்டங்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்து அன்றாட ஜீவனோபாயத்திற்கு

ஏங்கும் எமது மக்களின் வறுமையை மேலும் அதிகரிக்குமே தவிர இவர்களது போராட்டத்தை தென்னிலங்கை கண்டுகொள்ளப் போவதில்லை. மாறாக, வடக்கு கிழக்கில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் எனக்கூறி நடைபெறும் இவர்களது இவ்வாறான செயற்பாடுகள் தென்னிலங்கையின் சிங்கள தேசியத்தை வலுப்படுத்துவதற்கும் அதற்கான முகவர்களாக இவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதே பட்டவர்த்தமான உண்மையாகும்.
- என்றார். (05)

## இலங்கையில் 15 சதவீத மாணவர்கள் கண்பார்வை குறைபாட்டால் பாதிப்பு!

இலங்கையில் 15 சதவீத பாடசாலை மாணவர்கள் தொலைதூரக் கண்பார்வை குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் கண் மருத்துவர் ஹிரண்ய குணசேகர தெரிவித்துள்ளார்.

உலக கண்பார்வை தினத்தை முன்னிட்டு தேசிய கண் வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவி-யலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் –

குழந்தைகளின் கண் நோய்கள் குறித்து பெற்றோர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏதேனும் குழந்தை கண் நோயால் பாதிக்கப்பட்டால் உடனடியாக சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும்.

குழந்தைகள் மிக அருகில் தொலைகாட்சி பார்ப்பது, புத்தகங்களைப் படிப்பது, தலைவலி, அடிக்கடி கண் சிமிட்டுதல் போன்ற அறிகுறிகளால் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடி சிகிச்சை பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நீரிழிவு நோயால் ஏற்படும் கிளௌகோமாவின் பக்கவிளைவாக குருந்தூர கண்பார்வை குறைபாடு பாதிப்பும் உள்ளது.

குருந்தூர கண்பார்வை குறைபாடு மயோபியா என்று அழைக்கப்படுகிறது. இந்த பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு பிரெ-ய்லியை அறிமுகப்படுத்தக்கூடாது. சில குழந்தைகள் குருந்தூர கண்பார்வை குறைபாடுடன் பிறக்கிறார்கள், பெரும்பாலும் கர்ப்ப காலத்தில் ரூபெல்லாவின் வெளிப்பாட்டின் காரணமாகவும் இந்தப் பாதிப்பு ஏற்படுகின்றது.

உலகில் சுமார் 128 மில்லியன் மக்கள் இத்தகைய குருந்தூர பார்வை குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றனர.; எனவே பெற்றோர்கள் இது குறித்து குழந்தைகளிடம் மிகவும் அவதானத்துடன் இருத்தல் அவசியம். - என்றார். (05)



## பொகவந்தலாவையில் சிறுத்தை ஒன்று மீட்பு

### உயிரிழந்த நிலையில்

பொகவந்தலாவை பிரதேச தோட்டக் கம்பனிக்கு சொந்தமான லெதண்டி தோட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை சிறுத்தை ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சுமார் நான்கு அடி நீளம் கொண்ட சிறுத்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த தோட்டத்துக்கு தற்செயலாக வந்த நபர் ஒருவர் சிறுத்தையின் சடலத்தைக் கண்டு ஹற்றன் பொலிஸாருக்கும் நல்லதண்ணி வனவிலங்கு அலுவலகத்துக்கும் உடனடியாகத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரிகள் சிறுத்தையின் சடலத்தை சோதித்து குறித்த சிறுத்தை வேறு மிருகங்களின் தாக்குதலால் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்தனர். (05)

## தடை செய்யப்பட்டுள்ள பொலித்தீன் பாவனை

### யாழ்ப்பாணத்தில் 14 பேருக்கு எதிராக வழக்கு





தடைசெய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை உடைமையில் வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

உக்க முடியாத, 20 மைக்ரோனுக்கு குறைவான பொலித்தீன், வண்டே கப், பிளாஸ்ரிக் ஸ்ரோ, பிளாஸ்ரிக் இடியப்ப தட்டுக்கள், பிளாஸ்ரிக் பூமாலை, பொதியிடலுக்கு பயன்படுத்தும் கவர் பிளாஸ்ரிக் கரண்டிகள் என்பவை தடை செய்யப்பட்ட பொருள்கள் ஆகும்.

அவற்றை உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்தல் பயன்படுத்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றங்கள் ஆகும்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 09 மாத கால பகுதிகளில் 13 தடவைகள் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். அதன் போது , உணவகங்கள் , விற்பனை நிலையங்கள் என 205 வர்த்தக நிலையங்களில் சோதனையிட்டுள்ளோம்.

அவற்றில் 14 உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன.

எதிர்வரும் காலங்களிலும் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். எனவே வர்த்தகர்கள் தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் என்பவற்றை விற்பனை செய்-யவோ , பயன்படுத்தவோ உடைமையில் வைத்திருக்கவோ வேண்டாம் எனத் தெரிவித்தார். (05)



## இலங்கை இறுதிப் போரின் ஆரம்ப கணங்களை காஸா சம்பவங்கள் நினைவுபடுத்துகின்றன

### மார்க் சோல்டர் கருத்து

காசாவில் தற்போது இடம்பெறும் சம்பவங்கள் இலங்கையின் இறுதி போரின் ஆரம்ப தருணங்களை நினைவுபடுத்துகின்றன என பத்திரிகையாளரும் ஆய்வாளரும் எழுத்தாளருமான மார்க் சோல்டர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு குறித்த என்ற நூலை எழுதிய மார்க்சோல்டர் தனது ருவிட்டர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

காசாவில் தற்போது இடம்பெறும் சம்பவங்கள் இலங்கையின் இறுதிபோரின் ஆரம்ப தருணங்களை நினைவுபடுத்துகின்றன. அக்காலப் பகுதியில் இலங்கையில் பொதுமக்கள் அரசாங்கம் அறிவித்த உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இதன் பிரதான விளைவு என்னவென்றால் தொடர்ச்சியான வான்வெளி ஆட்டிலறி தரைதாக்குதலால் பொதுமக்கள் உயிரிழப்புகள் பல மடங்காக அதிகரித்தன. விடுதலைப் புலிகளை பொதுமக்கள் மத்தியில் காணப்பட்ட ஆயுதங்களை இலக்குவைத்து இலங்கை இராணு-வத்தினர் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

எதிர்வரும் நாள்களில் காசாவில் இதுபோன்ற சூழ்நிலை ஏற்படாது என நம்புகின்றேன் பிரார்த்திக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (05)

## இஸ்ரேலில் இருக்கும் இலங்கையர்களுக்கு 30,000 அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு!



இஸ்ரேலில் இருக்கும் இலங்கையர்களுக்கு 30,000 அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்களின் நலனுக்காக ஏதேனும் அவசரநிலைகள் ஏற்பட்டால் பயன்படுத்துவதற்கு குறித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடமிருந்து 20,000 அமெரிக்க டொலர்களும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடமிருந்து 10,000 அமெரிக்க டொலர்களுமாக மொத்தம் 30,000 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேலில் இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக இரண்டு இலங்கையர்கள் காணமல்போயுள்ளதோடு, ஒருவர் காயமடைந்துள்ளார்.

யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்களின் பட்டியலை இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் சுமார் 8,000 இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 90 சதவீதம் பேர் முதியோர் இல்லங்களில் பராமரிப்பாளர்களாக உள்ளனர். காசா மற்றும் லெபனான் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பதற்றம் நிலவினாலும், நாட்டின் பிற பகுதிகளில் இயல்பு நிலை நீடிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் தொடங்கியிருக்கும் மிடுக்கு

ஒரு வழியாக 41 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா – இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவை நேற்றுத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் நாகைப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இந்தப் பயணிகள் கப்பல் சேவை தொடங்கியுள்ளது. ஒப்பீட்டளவில் இந்தச் சேவை தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையிலும் பார்க்க அதிக நேரத்தை எடுத்தாலும் அதிக செலவு பிடித்தாலும் அதிகளவு பொருட்களை எடுத்துச் செல்ல முடியும் என்பதால் சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நடவடிக்கைகளுக்கு இது பேருதவியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்படும் என்கிற எதிர்பார்ப்பு நீண்டகாலமாக இருந்தபோதும் பல்வேறு இழுபறிகள் காணப்பட்டன. இலங்கையின் பக்கத்தில் இருந்த மட்டுமல்ல இந்தியப் பக்கத்திலும் பல்வேறு தடங்கல்கள் காணப்பட்டன. அங்கு எந்தத் துறைமுகத்தில் இருந்து இந்தச் சேவையை நடத்துவது என்பதை இறுதிசெய்யவே நீண்ட நாட்கள் சென்றன.

இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்குச் செல்பவர்கள் நாகைப்பட்டினத்தில் இருந்து மாநிலத் தலைநகர் சென்னைக்கோ அல்லது இந்தியாவின் வேறு பகுதிகளுக்கோ செல்வதற்கு ஏதுவான போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளைக் கொண்ட துறைமுகமாகக் கடைசியில் நாகைப்பட்டினத் துறைமுகம் அடையாளம் காணப்பட்டே இந்தக் கப்பல் சேவை அங்கிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

இந்த வழித் தடத்தில் முழுமையான பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்படுவதற்கு முன்னதாக, ஒரு பரீட்சார்த்த முயற்சியாகவே தற்போதைய செரியாபாணி கப்பல் சேவையைத் தொடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அது வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் தனியார் நிறுவனங்கள் இந்த வழித் தடத்தில் கப்பல் சேவைகளை வழங்க முன்வரும். அப்போது இந்தச் சேவை இன்னும் மேம்பட்டதாகவும் திறம்பட்டதாகவும் அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

தொடக்கத்தில் இந்தக் கப்பல் சேவையில் 100 கிலோ பொருட்களை எடுத்துச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் இப்போது 50 கிலோ பெரருட்கள் மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றன. அதேநேரம் இந்தக் கப்பல் சேவையிலும் பார்க்க கொழும்பு – சென்னை வான் வழிப் பயணத்துக்கான கட்டணம் திடீரென பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கின்றது. இது இந்தக் கப்பல் சேவைக்கான பெரும் சவாலாக மாறும் என்று எதிர்பார்க்கலாம். இருந்தாலும் ஒரு ஆழ்கடல் பயணம் உள்ளிட்ட 'அட்வென்ஜர்' இந்தப் பயத்தில் காத்திருப்பதன் காரணமாக இது சுற்றுலாவிகளைக் கவர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

கப்பல்சேவையைப்பயன்படுத்துவோர்எண்ணிக்கை அதிகரிக்கும்போது கட்டணங்கள் குறைவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கக்கூடும். எனவே வடக்கில் உள்ள தொழில்முயற்சியாளர்கள் குறிப்பாக சிறு மற்றும் நடத்தர தொழில்முயற்சியாளர்கள், உலகின் பெரும் சந்தைகளில் ஒன்றான இந்தியச் சந்தைக்குள் தாம் நுழைவதற்கான தொடக்கப் புள்ளியாக இந்தக் கப்பல் சேவையைப் பயன்படுத்த முயற்சிக்கவேண்டும். அப்போதுதான் இந்தச் சேவை வெற்றிகரமானதாக அமைவதுடன் பயனுள்ளதாகவும் இருக்கும்.

எப்படியிருந்தாலும் இந்தக் கப்பல் சேவையின் தொடக்கம்என்பதுஇ–ருநாடுகளுக்கும்இடையிலான உறவுகளைமட்டுமன்றிதமிழர்களுக்குஇடையிலான உறவுகளையும்மேலும்பலப்படுத்தும்என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

# ரணிலின் பிரித்தாளும் தந்திரம்

உபுல் ஜோசப் பெர்னான்டோ




இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஏன் முடிவு செய்தீர்கள் என்று வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் ஜே.ஆரிடம் கேட்டபோது, இந்தியாவின் செல்வாக்கிற்கு அஞ்சாமல் போரை நடத்த அமெரிக்காவிடம் தான் உதவி கேட்டார் எனவும், ஆனால் அமெரிக்கா மறுத்துவிட்டது என்றும் ஜே.ஆர் பதிலளித்தார்.

ஜே.ஆரின் பதிலில் இருந்து, அவர் இந்தியாவையும் அமெரிக்காவையும் ஒன்றுக்கொன்று எதிராக மோதவிட முயன்றார் என்பதும், அமெரிக்க உதவியை எதிர்பார்த்திருக்கிறார் என்பதும் தெளிவாகிறது. ஜே.ஆரின் மருமகன் ரணில் ஜே.ஆரின் பிரித்தாளும் அதே இராஜதந்திரத்தையே இப்போதும் பரிசீலித்துப் பார்க்கிறார் போன்று தோன்றுகின்றது.

அண்மையில் ரணிலின் மாமாவின் 'டெய்லி மிரர்' நாளிதழ் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் அறிக்கையை ஒரு செய்தியாக வெளியிட்டிருந்தது. அதில்,

அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகியன தமது சொந்த புவிசார் அரசியல் தொடர்பான



விவகாரங்களை மட்டும் இலங்கையுடன் நேரடியாகப் பேசவேண்டுமே தவிர மூன்றாம் தரப்பினரின் விடயங்கள் குறித்துப் பேசக்கூடாது என்று அந்த நாடுகளுக்குத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தி கூறியது.

அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, சமீப காலங்களில் அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலர் விக்டோரியா நூலண்ட்டைச் சந்தித்தபோதும் ஜப்பான் பிரதிநிதிகளைச் சந்தித்த போதும் இந்தச் செய்தியை வலியுறுத்தினார் என்று 'டெய்லி மிரர்' பத்திரிகை நம்பகத்தன்மையுடன் அறிந்துள்ளது என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத் தொடருக்காக அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது பக்க நிகழ்வுகளாக நடந்த சந்திப்புக்களில் அயலுறவுத்துறை அமைச்சர் இந்த விடயங்களை வலியுறுத்தியிருக்கிறாராம்.

அமெரிக்கா, ஜப்பான் நாடுகள் எந்தவொரு வியத்திலும் தங்கள் கவலைகளை நேரடியாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அலி சப்ரி அந்த அறிக்கையில் மூன்று நாடுகளைப் பற்றி பேசுகிறார். இந்த மூன்று நாடுகளும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஜப்பானாக இருக்கவேண்டும்.

'ஷி யாங் 6' என்ற சீன ஆராய்ச்சிக் கப்பலின் திட்டமிட்ட பயணம் தொடர்பாக இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய முத்தரப்பு அழுத்தத்தில் இலங்கை தற்போது உள்ளது.

இந்தக் கப்பலின் வருகை நவம்பர் வரை ஒத்திவைக்கப்படவேண்டும் என்று இலங்கை விரும்பினாலும், கப்பல் ஒக்டோபரிலேயே இலங்கையை அடையவேண்டும் என்று சீனா வலியுறுத்துகிறது.

கப்பல் வருகை தொடர்பில் அமெரிக்காவும், இந்தியாவும் வெளிப்படையாக அறிவித்தன. ஆனால் ஜப்பான் அந்த நாடுகள் மூலம் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியது. இலங்கை தொடர்பான புவிசார் அரசியல் விடயங்களை அமெரிக்கா நேரடியாக இலங்கையுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் ஜப்பான் புவிசார் அரசியல் விடயங்களை நேரடி யாக கலந்துரையாட வேண்டும் எனவும் மூன்றாம் நாடு ஊடாக அந்த விடயங்களைப் பேசக்கூடாது எனவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார். சபரி குறிப்பிட்ட மூன்றாவது நாடு இந்தியாவாக இருக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் கூறு வதானால், இந்தியா மற்றும் இலங்கையின் புவிசார் அரசியல் பிரச்சினைகள் பற்றி அமெரிக்காவும் ஜப்பானும் பேசக்கூடாது என்று அலி சப்ரி கூறுகிறார்.

இலங்கை தொடர்பான புவிசார் அரசியல் பிரச்சினைகளை அமெரிக்கா மற்றும் ஜப்பான் மூலம் இந்தியா விவாதிக்கக் கூடாது என்பது அதன் மறுதலையான அர்த்தம்.

ஜனாதிபதியாக ரணில் ஜப்பானுக்குப் பயணம் செய்வதற்கு முன்னர், இந்திய சீன முரண்பாட்டைச் சம்பந்தப்படுத்தாது அமெரிக்காவையும் ஜப்பானையும் தனித்தனியாக நேரடியாக கையாள்வதற்கான வழியை அவர் தேடுகிறார் என்று பெயர் வெளியிட விரும்பாத ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் இணையத்தளத்திற்குத் தெரிவித்திருந்தார்.

இந்த அமெரிக்க, இந்திய, ஜப்பானியக் கூட்டணியுடன் இலங்கையும் இணைந்து செயற்படுவதற்கு அனுமதிக்க ரணில் தயாராக இல்லை என்பதுதான் அதன் அர்த்தம். இந்தியா மூலம் தெற்காசிய நாடுகளை அமெரிக்கா கையாள்வதை ரணில் ஏற்கவில்லை என்றே தெரிகிறது. ஆனால் ரணிலின் முயற்சி வெற்றிபெறவில்லை என்பதையே அமைச்சர் அலி சப்ரியை மேற்கோள்காட்டி டெய்லி மிரர் நாளிதழ் வெளியிட்ட செய்தி வெளிப்படுத்துகின்றது.

மை செரன்டிப் என்கிற இந்தப் பத்தியில் ஏற்கனவே ரணிலின் பிரித்தாளும் தந்திரம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வத்திக்கான் பிரதிநிதிக்கும் கர்தினால் மல்க்கம் ரஞ்சித்துக்கும் இடையிலும் கத்தோலிக்கத் திருச்சபைக்கு இடையிலும் ரணில் தனது பிரித்தாளும் இராஜதந்திரத்தைப் பயன்படுத்துகிறார் என்று அந்தப் பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இன்று அது உண்மையாகிவிட்டது. ஜேர்மன் தொலைக்காட்சிக்கு ரணில் அளித்த நேர்காணலில், கர்தினால் மல்க்கம் ரஞ்சித்துக்கும் இலங்கை ஆயர் மன்றத்துக்குகம் இடையில் முரண்பாடுகள் உள்ளன என்று கூறித் தனது பிரித்தாளும் தந்திரத்தைக் காண்பித்திருப்பார். ஆனால் ஆயர்கள் மன்றம் தங்களுக்குள் எந்தப் பிளவும் இல்லை என்பதை அறிக்கை ஒன்றின் மூலம் நிரூபித்தது.

பிரித்தாளும் இராஜதந்திரத்தின் ஆபத்து இதுதான். இந்த ஆட்டத்தில் ரணில் வெற்றி பெறுவாரா இல்லையா என்பதை கணிப்பதற்கு இது போதுமான காலமல்ல. ஆனால், ஒன்று மட்டும் உண்மை அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் இந்த ஆட்டத்தை ஆட முற்படுவது நெருப்புடன் விளையாடுவதற்குச் சமம்.

காலைக்கதிர் Kalaikkathir

# 50 இ.போ.ச. பஸ்கள் மீண்டும் சேவைக்கு

சேவையிலிருந்து நீக்கப்பட்ட 50 சொகுசு ரக பஸ்கள் எதிர் வரும் 6 மாதங்களில், மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகள், உதிரிபாகங்களின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் காரணமாக தற்போது சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள. குறித்த பஸ்கள், கடுபெத்த அதிசொகுசு ரக சுற்றுலா போக்குவரத்து சேவை நிறுவனத்தில் தரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாயமாநாட்டின்போக்கு-வரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக அரசாங்கத்தால், கொண்டு வரப்பட்ட 50 சொகுசு ரக பஸ்களே இவ்வாறு தரித்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பஸ்களால் நாளாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிகமான தேறிய இலாபத்தை ஈட்ட முடியும் என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த பஸ்களை விரைவாக திருத்தி மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மாலைதீவு பிரஜை நீர்கொழும்பில் கைது!

சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்தபோது, அங்கு தனக்காக வசதிகளைபெற்றுக்கொண்டுஅதற்கான ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் மாலைதீவு பிரஜை ஒருவர் நீர்கொழும்பு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம், கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதான சந்தேக நபர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (05)

# 2 ஆயிரத்து 518 தாதியர்களின் நியமனத்துக்கு அனுமதி!

2018ஆம்ஆண்டுதாதியர்பயிற்சி-யாளர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 2,518 பேருக்கு நியமனத்தை வழங்குவதற்கு திறைசேரி இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக முதற்கட்டமாக 1,000 தாதியர் பயிற்சியாளர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு முன்னதாக யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினர் முன்வைத்த கோரிக்கையை அடுத்து, சகல தாதியர் பயிற்சியாளர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (05)

# புத்தளம் தில்லையடி கிராமத்திற்குள் புகுந்த யானை தாக்கி மூவர் காயம்

புத்தளம் தில்லையடி கிராமத்திற்குள் வெள்ளிக்கிழமை அதிகாலை காட்டு யானையொன்று திடீரென உட்புகுந்து மூவரைத் தாக்கியதோடு உடைமைகளையும் சேதப்படுத்தியுள்ளது.

கிராமத்தினுள் காட்டு யானையொன்று திடீரென உட்புகுந்து வீட்டின் சுவர்களை சேதப்படுத்திய நிலையில், அவ்வழி-யால் சென்றவரையும் தாக்கியதோடு அவரது சைக்கிளையும்சேதப்படுத்தியுள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

குறித்தயானைஓட்டோதிருத்துமிடத்தினூடாகசென்று இரண்டுஓட்டோக்களையும் சேதப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தனர்.

அத்துடன், குறித்த யானை தில்லையடி பகுதியிலிருந்து குட்செட் வீதியினூடாக சென்று ஓட்டோவையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது,ஓட்டோவில் பயணித்தவர் புத்தளம் ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த யானை தில்லையடி பகுதியிலிருந்து குட்செட் வீதியினூடாக புத்தளம் வில்லு பகுதியில் குளத்திற்குச் சென்றுள்ளது.

புத்தளம்வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் பட்டாசு வெடித்து குறித்த யானையை துரத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குளத்தில் நின்ற யானை பத்தினி அம்மன் கோவிலின் பின்புறத்தையும்உடைத்துக் கொண்டு அவ்வழியால் ஐயபிம பகுதிக்குள் உட்புகுந்துள்ளது.

அதேவேளை, மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரையும் தாக்கியுள்ளதாகவும் குறித்த நபரும் புத்தளம் ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யானை புத்தளம் குருநாகல்பிரதானவீதியைக் கடந்துஜனாவாசகாணிக்குள் உட்புகுந்துள்ளதாகஅப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (05)

# சவூதிக்கு பணிப்பெண்ணாக சென்றவரை தீ வைத்துக் கொளுத்திய எஜமானர்கள்

## இலங்கைக்கு அழைக்குமாறு அவர் கோரிக்கை

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்ணாகச் சென்ற ஒருவரை, அவர் வேலை செய்த வீட்டின் எஜமானரும் எஜமானியும் இணைந்து உடலில் பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கொத்தடுவ புதிய நகரைச் சேர்ந்த 45வயதுடையநயனாதில்ருக்ஷிஎன்ற பெண்ணே இந்தச் சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளார்.

சுமார் 7 மாதங்களுக்கு முன்னர் தான் இந்த துரதிஷ்டவசமான சம்பவத்தை தான் எதிர்கொண்டதாக அவர்கூறியுள்ளார். சவூதிஅரேபியாவில் உள்ள மருத்துவமனையில் பல மாதங்களாக சிகிச்சை பெற்று வந்ததாகவும், பின்னர் சவூதி பொலி-ஸாரின் தலைமையீட்டில் தான் தடுப்பு மையத்துக்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார். கடும் சிரமங்களுக்கு மத்தியில் சுமார் ஒன்றரை மாதங்களாக தடுப்பு முகாமில் வாழ்ந்து வருவதால், தம்மை விரைவில் இலங்கைக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஹீராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பதிவின்றி 10 ஆண்டுகளுக்கு மேல் இயங்கி வரும் இரணைமடுக்குள கமக்கார அமைப்பு சம்மேளனம்

கிளிநொச்சி இரணைமடுக்குள கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் என்ற அமைப்பு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்படாமலும் அதற்கான நிர்வாகக் கட்டமைப்பு 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் புனரமைப்பு செய்யப்படாமலும் இயங்கி வருகின்றமை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான கமக்கார அமைப்புகளை கொண்டு உருவாக்கப்பட்ட இந்த சம்மேளனம் இதுவரை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்படாமல் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்றமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு சட்ட ரீதியாக பதிவு செய்யப்படாத அமைப்பு வருடந்தோறும் விவசாயிகளிடமிருந்து பெருந்தொகையான நிதிகளை மாவட்ட உயர்நிலை அதிகாரிகளின் உதவியோடு அறவீடு செய்துவருவதுடன், அது தொடர்பான கணக்கறிக்கைகள் எவையும் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கணக்காய்வு செய்யப்படாமலும், கணக்குகள் வெளிப்படைத்தன்மையின்றியும் பலமில்லியன் ரூபா நிதி முறையற்ற விதத்தில் செலவிடப்பட்டுள்ளன.

இது தவிர குறித்த அமைப்பினுடைய நிர்வாக ஆயுட்காலம் இரண்டு வருடங்களாகக் குறிப்பிடப்படுகின்றபோதும், கடந்த 2017ஆம் ஆண்டுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பே அதன் ஆயுட்காலம் 2019 உடன் நிறைவடைந்த போதிலும், குறித்த நிர்வாகமே இன்று வரை செய்யப்பட்டு வருகிறது. அதன் நிர்வாகக் கட்டமைப்பு புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யப்படாத அமைப்பு ஒன்று முறையற்ற விதத்தில் இயங்கி விவசாயிகளிடம் இருந்து வருடந்தோறும் பலமில்லியன் ரூபா நிதியை அறவிட்டு விவசாயிகளின் எந்த தேவைகளுக்கும் பயன்படுத்தாமல், அதிகாரிகளின் வருடாந்த ஒன்று கூடல் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் அரசியல் கட்சிகளின் நிகழ்வுகளுக்கு நிதி பங்களிப்புச் செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு மாத்திரமே குறித்த நிதிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு விவசாயிகளிடமிருந்து அறவிட்ட பெருந்தொகை நிதியை பயன்படுத்தி விவசாயிகளினுடைய எந்த பங்குபற்றுதலும் இன்றி விவசாயிகள் எவரும் அழைக்கப்படாமலும் மாவட்டத்தின் அதிகாரிகளை மாத்திரம் அழைத்து அவர்களுக்காகவே அறுவடை விழா நடத்தி அவர்களை கௌரவித்தமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்களையும் ஏற்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 333 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பதுடன் சுமார் 7313 குடும்பங்கள் உரிய உணவுப்பாதுகாப்பின்றியும் வறுமையில் வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு மக்கள் வறுமையில் வாழ்கின்ற நிலையிலும் சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுதல் என பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றபோதும் இவ்வாறான நிதிகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை தொடர்பில் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யப்படாத அமைப்பு ஒன்றினாலேயே இவ்வாண்டு சிறுபோக செய்கையின்போது ஏழை விவசாயிகளின் நீர் வரிப்பங்குகள் கமநல சேவை நிலையத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து, அவற்றை முறையற்ற விதத்தில் மோசடி செய்து அதனை பெருந்தொகை பணத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக ஏழை விவசாயிகளை வஞ்சித்து ஒருசிலர் மட்டுமே இதன் சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர் என அறிய முடிகிறது. (05)



# விபுலானந்தர் மணி மண்டபம் கல்முனையில் திறந்துவைப்பு

கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் மீளப் புனரமைக்கப்பட்ட விபுலானந்தர் மண்டபம் கடந்த புதன்கிழமை காலை அதிபர் திருமதி விஜயசாந்தினி நந்தபால தலைமையில் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் விருந்தினர்களாக சிவஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள், கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஆ.சஞ்சீவன், வி.ரி.சகாதேவராஜா, கல்முனை மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் சமூகசேவையாளருமான சந்திரசேகரம் ராஜன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக அதிதிகள் பான்ட் வாத்தியம், தமிழ் இன்னியம் சகிதம் வரவேற்கப்பட்டு, விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டு, பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, விபுலானந்தர் மணிமண்டபம் திறந்துவைக்கப்பட்டது. மாணவர், ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. அதிதிகள் பாடசாலைச் சமுகத்தால் பொன்னாடை போர்த்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 5 வருடங்களாக விபுலானந்தர் மணிமண்டபம் பழுதடைந்து இருந்த நிலையில் கல்முனை மாநகரசபை முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் வேண்டுகோளுக்கிணங்க லண்டனில் வாழும் பாண்டிருப்பைச் சேர்ந்த திருமதி வனிதா இராஜகுமார் மண்டபத்தைப் புனரமைப்பதற்கு 20 லட்சம் ரூபாவை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)




காலைக்கதிர் Kalaikkathir

## மோதலுக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அந்நேர்காணலில் அவர் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

பிரித்தானியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்புஉறவுகள் ஆரம்பமாகி 75 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருக்கும் இவ்வேளையில் இந்து - பசுபிக் பிராந்திய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் முதன் முறையாக இலங்கைக்கு வருகை தருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதன்போது காலநிலை மாற்றம் தொடக்கம் கடற்பிராந்தியப் பாதுகாப்பு வரை பிராந்திய ரீதியில் முக்கியத்துவம் பெறும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாம் கலந்துரையாடினோம்.

குறிப்பாக கடற்பாதுகாப்பை முன்னிறுத்திய கூட்டு நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு உள்ளடங்கலாக இந்து சமுத்திரப்பிராந்தியம் தொடர்பில் பிரித்தானியா கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் இந்து சமுத்திர கரையோர நாடுகள் அமைப்பின் மாநாட்டில் நான் கலந்துகொண்டேன். இந்து சமுத்திர கரையோர நாடுகள் அமைப்புக்கு இலங்கை தலைமைதாங்கும் இவ்வேளையில், நாம் ஒன்றிணைந்து இருதரப்பினருக்கும் பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய புதிய வாய்ப்புக்களை அடையாளங்காணவும், இருதரப்பு வர்த்தகத்தொடர்புகளை மேம்படுத்திக்கொள்ளவும் முடியும் என நம்புகின்றேன். இதில் இலங்கையின் பொருளாதார மீட்சியை முன்னிறுத்திய பிரித்தானியாவின் உதவிகளும் அடங்கும்.

இருநாடுகளினதும் கூட்டிணைந்த ஒத்துழைப்பில் காலநிலைசார் நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியை முன்னிறுத்திய செயற்பாடுகள் என்பன மிகப் பிரதானமானவையாகும். அதேவேளை மோதலின் பின்னரான நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு ஆகிய விவகாரங்களிலும் நாம் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றோம்.

அதன்படி இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைபேறான வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் இந்து சமுத்திர கரையோர நாடுகள் அமைப்பு போன்ற பிராந்தியக் கட்டமைப்புக்களின் ஊடாக இலங்கையுடனும் ஏனைய முக்கிய நாடுகளுடனும் எமது தொடர்புகளை விரிவுபடுத்திவருகின்றோம்.

கடந்தகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவதுடன் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற, துடிப்பான பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கே நாம் உதவ விரும்புகின்றோம்.

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றின் ஊடாக 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான மனிதாபிமான உதவிகள் பிரித்தானியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டன. அவ்வுதவிகள் மூலம் பொருளாதார நெருக்கடியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட சுமார் 70,000 மக்கள் பயனடைந்தனர். அதேபோன்று மோதலுக்கு பின்னரான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கும், மனித உரிமைகளைமேம்படுத்துவதற்கும், சமூகங்களுக்கு இடையில் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான உதவிகளை நாம் தொடர்ந்து வழங்குவோம்.

நிலையானதும், அனைவரையும் உள்ளடக்கியதுமான சமாதானத்தை உறுதிசெய்வதன் மூலமே உறுதியான இலங்கையைக் கட்டியெழுப்பமுடியும். அதன்மூலம் இலங்கையால் வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்க்கவும், பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்ளவும் முடியும் - என்றார் அவர்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு சர்வதேச சட்டத்திற்கமைய இல்லை

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கருத்து

இலங்கைநாடாளுமன்றத்தில்ஆளும்தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் ஆகிய இரண்டு சட்டமூலங்களுமே சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப அமையவில்லை. எனவே, அவை மனித உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க முடியும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் (நுக்ஷிளீக்ஷியூ) தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்மனிதஉரிமைகள்ஆணையாளரின் பேச்சாளர ரவினா ஷம்தாசனியே தெரிவித்ததாவது:பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவில், தூக்குத் தண்டனையை நீக்குவது உள்ளிட்ட சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும் திருத்தப்பட்ட வரைவில் உள்ள பல விதிகளின் நோக்கம் மற்றும் பாரபட்சமான விளைவுகள் குறித்து இன்னும் பெரியளவில் கரிசனைகள் உள்ளன.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமைகளுக்கான கட்டுப்பாடுகள் ஏற்புடையவையல்ல. இந்த நிலையில் குறித்த யோசனை, பயங்கரவாதத்தின் பரந்த வரையறையை உள்ளடக்கியுள்ளது.

அத்துடன் போதிய நீதித்துறை மேற்பார்வையின்றி, மக்களைத் தடுத்து நிறுத்தவும், கேள்வி கேட்கவும், தேடவும், கைது செய்யவும், தடுத்துவைக்கவும், காவல்துறைக்கும் - இராணுவத்திற்கும்-பரந்தஅதிகாரங்களைவழங்குகின்றது.

ஊரடங்குச் சட்டம், கட்டுப்பாடு உத்தரவுகள் மற்றும்தடைசெய்யப்பட்டஇடங்களைகுறிப்பிடுதல் ஆகியவற்றில் பிரச்சினைகள் உள்ளன,

இவை அனைத்தும் போதுமான சமநிலை இல்லாமல் நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நோக்கம் பற்றிய சந்தேகங்களை எழுப்புகின்றன.

இணைய வழி பாதுகாப்பு யோசனையை பொறுத்தவரை,இதுபொதுமக்கள்உட்படஇணைய தகவல் தொடர்புகளை கடுமையாக பாதிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் என்று நம்பப்படுகிறது

சட்டமூலத்தின்பலபிரிவுகள்,தன்னிச்சையான மற்றும் குற்றங்களின் தெளிவற்ற விதிமுறை வரையறைகளைக் கொண்டிருக்கின்றன. இவை, பெரும்பாலும் அனைத்து வகையான சட்டபூர்வமான வெளிப்பாட்டையும் குற்றமாக்கக் கூடும். எனவே இந்த சட்டமூலம், கருத்துச் சுதந்திரத்தின் மீது பாரிய விளைவை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குகிறது.

இந்த நிலையில் சிவில் சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சுயாதீன நிபுணர்களுடன் மேலும் அர்த்தமுள்ள ஆலோசனைகளை மேற்கொள்ளுமாறும்,சர்வதேசமனிதஉரிமைகள் கடப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கும் வகையில், சட்ட வரைவுகளில் கணிசமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் ஐக்கிய நாடுகள்மனிதஉரிமைகள்அலுவலகம்இலங்கை ஆட்சியாளர்களிடம் வலியுறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படாதது ஏன்?

## பேராசிரியர் செல்வகுமாரன் தெரிவிப்பு

அரசாங்கம் மற்றும் அரச கட்டமைப்புக்களிடமிருந்து நம்பகத்தன்மைவாய்ந்த உண்மையான தகவல்கள் வெளிவராதபோது போலியானதும், தவறானதுமான தகவல்கள் உருவாவதாகசுட்டிக்காட்டியுள்ளபொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினரும், கொழும்பு பல்கலைக்கழகசட்டபீடமுன்னாள்பீடாதிபதியுமான பேராசிரியர் என்.செல்வகுமாரன், உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படாதது ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

தெற்காசிய சிந்தனைக் குழாம்களின் ஒன்றியத்துடன் இணைந்து தேசிய சமாதானப்பேரவையால்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த 'சர்வதேச தொடர்புகளில் போலிச்செய்தி, தவறான தகவல் மற்றும் பரப்புரை' எனும் புத்தக வெளியீட்டு நிகழ்வு கொழும்பிலுள்ள ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 'சர்வதேச தொடர்புகளில் போலிச்செய்தி, தவறான தகவல் மற்றும் பரப்புரை குறித்த இலங்கையின் அனுபவங்கள்' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குழு ரீதியான கலந்துரையாடலில் பங்கேற்று, உரையாற்றுகையிலேயே பேராசிரியர் செல்வகுமாரன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது -

பொதுமக்களுக்கு சரியான தகவல்களை வழங்கவேண்டிய பொறுப்பில் உள்ள அரசாங்கத்திடமிருந்து நம்பகத்தன்மைவாய்ந்த தகவல்கள்வெளிவராதபோதுபோலிச்செய்திகளும், தவறான தகவல்களும் உருவாகின்றன. பொதுவெளியில் பகிரப்படும் தவறான தகவல்கள் மக்களால் நம்பப்படுகின்றன.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக்குதல்கள் தொடர்பில் 'சனல்-4' செய்திச்சேவையால்அண்மையில்வெளியிடப்பட்ட ஆவணப்படம் சர்ச்சைக்குரிய பேசுபொருளாக மாறியிருக்கின்றது. ஆனால் அந்தத் தாக்குதல்கள் தொடர்பில்விசாரணைகளைமேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் பொது மக்கள் பார்வையிடக்கூடியவகையில் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது.

அதேபோன்று மேற்குறிப்பிட்ட ஆவணப்படம் வெளியானதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மீண்டுமொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறெனில் முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் அவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மீது ஜனாதிபதி நம்பிக்கை இழந்திருக்கின்றாரா? என்ற கேள்வி எழுகிறது.

இவையனைத்தும் ஆட்சியியல்சார் நெருக்கடிகளையே காண்பிக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பதாகவே நாட்டின் அரசசேவை அரசியல்மயப்படுத்தப்பட்டதாக மாறியிருக்கின்றது. அரசசேவையில் ஈடுபடும் ஊழியர்கள் 'அரச' ஊழியர்களாகவன்றி, 'அரசாங்க' ஊழியர்களாக மாறியிருக்கின்றார்கள். குறிப்பாக 2019 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறியவுடன் உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அதிகாரிகள் மாற்றப்பட்டனர் என வெளியான செய்திகளை அதற்கு உதாரணமாகக் கூறமுடியும்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது அரசசேவையின் முதுகெலும்பை நிமிர்த்துவது என்பது மிகக்கடினமானதாக இருப்பதாக நான் உணர்கிறேன். பெரும்பாலான அரச ஊழியர்கள் திறமை அடிப்படையிலான நேர்மையான பதவி உயர்வைப்பெறுவதில்லைஎன்பதால்,அவர்கள்மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கின்றார்கள். அதனால் அவர்களால் வெளியிடப்படும் தகவல்களை மக்கள் நம்புவதில்லை. எனவே முதலில் அரச கட்டமைப்புக்கள் மற்றும் அரசசேவையின் சுயாதீனத்தன்மையையும், நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அடுத்ததாக அனைவருக்கும் பாதுகாப்பான இணையவெளியைஉறுதிப்படுத்துவதுஅவசியம். இருப்பினும் அதனை முன்னிறுத்தி தற்போது அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள நிகழ்நிலைக்காப்பு சட்டமூலத்தின் சில உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதேபோன்றுஅந்தச்சட்டமூலத்தின்உள்ளடக்கம் தவறானமுறையில் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டியதும் இன்றியமையாததாகும்என்று வலியுறுத்தினார். (05)

# ராஜினாமா செய்வதே டக்ளஸுக்கு நல்லது

## சாணக்கியன் ஆலோசனை

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுக்கும்,தமிழ்மக்களுக்கும் ஏதாவது ஒரு நன்மை செய்வதாக இருந்தால் தன்னுடைய அமைச்சை இராஜினாமா செய்துவிட்டு வெறுமனே ஒரு நாடாளுமன்ற உறுப்பினாக இருப்பதே சிறந்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புஊடகஅமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்திய இழுவைப் படகு விடயம் குறித்து பிரதமர் மற்றும் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் எதிர்மறையானகருத்துகள்தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், பிரதமர் இந்திய இழுவை படகுகளுக்கு பாஸ் அடிப்படையில் அனுமதி வழங்கப்போவதாகத் தெரிவித்துள்ளார். அதே நேரம் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,ஒருதுளியேனும்இந்திய மீனவர்களுக்கு அனுமதியில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அத்துமீறிய மீன்பிடி இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? என கேள்வி எழுப்பியுள்ளார்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இழுவைப்படகு இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது அவருக்கு மாதமொன்றுக்கு இருபத்தைந்தாயிரம்ரூபா இலஞ்சம் கொடுப்பதாகவும் நாடாளுமன்றத் திலே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

இவ்வாறு அவர் தொடர்பான விடயங்கள் இருக்கின்றன என சாணக்கியன் வினவியுள்ளார்.

அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா, உண்மையிலேயே வாயால் சொல்வது ஒன்று நடைமுறைப்படுத்துவது ஒன்று. அந்த அமைச்சிற்கு பொருத்தமில்லாத ஒருவர் அவர்.

அவர் மீனவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏதாவது ஒரு நன்மை செய்வதாக இருந்தால் தன்னுடைய அமைச்சை இராஜினாமா செய்துவிட்டுவெறுமனேஒருநாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது வேறு ஏதாவதுஅமைச்சுப்பொறுப்பை,எமது மாவட்டத்திலேயும் ஒரு திணைக்களம் கூட சுற்றுநிரூபம் வெளியிடப்படாத அமைச்சை வைத்திருக்கும் அமைச்சர்களைப் போல அவரும் ஏதாவது தன்னுடைய சலுகைகளை எடுக்கக்கூடியவகையிலான அமைச்சைக் கேட்டெடுத்து பேசாமல் இருப்பதே பொருத்தம் என்று தெரிவித்துள்ளார்.

(05)

# கிங் கங்கைக்கு விடுக்கப்பட்டுள்ள வெள்ள அபாய எச்சரிக்கை நீக்கம்

கிங் கங்கையை அண்டிய தாழ்நிலப் பகுதிகளுக்கு கடந்த சில நாள்களாக விடுக்கப்பட்டிருந்த வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாய எச்சரிக்கை அறிவிப்பு நீக்கப்பட்டதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக பலத்த மழை காரணமாக கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்பட்டதால், கடந்த செப்ரெம்பர் 28ஆம்திகதி முதல் கிங் கங்கையை அண்டிய தாழ்நிலப் பகுதிகளுக்கும் வெள்ளம், மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், கடந்த 24 மணிநேரமாக அதிகளவு மழை பெய்யாததால் இந்த அபாய அறிவிப்பு நீக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நில்வளா கங்கையை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளுக்கு விடுக்கப்பட்டிருந்த வெள்ள அபாய எச்சரிக்கை அடுத்த 24மணிநேரங்களுக்குநீடிக்கப்படும் என்றும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# மலையகத்தில் எந்தவோர் உதவிகளை வழங்கவும் மலையக அரசியல்வாதிகள் அனுமதிப்பதில்லை

## சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் வேதனை

'நாம் விளையாட்டுத்துறை சார்ந்தோ அல்லது வேறெந்த விடயங்களிலோ உதவிகளை வழங்க மலையக அரசியல்வாதிகள் அனுமதிப்பதில்லை. ஒரு மைதானத்தில் எதைச்செய்வதானாலும், அங்குள்ள அரசியல்வாதிகள் மற்றும் பாடசாலைகளின் கல்விப் பணிப்பாளர்களினது அனுமதி வேண்டும். எனினும், அவர்களின் அனுமதி கிடைக்காது. அனுமதி பெறுவதும் மிகக் கடினம்' என மலையகத்தில் விளையாட்டுத்துறையை முன்னேற்றுவதில் உள்ள குறைபாட்டை சுழற்பந்து வீச்சாளர், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் சுட்டிக்காட்டினார்.

முத்தையா முரளிதரன் தனது கிரிக்கெட் வரலாற்றில் 800 விக்கெட்களை வீழ்த்திய சாதனையை, அவரது வாழ்க்கைப் பின்னணியோடு எடுத்துக்காட்டும் விதமாக தமிழ்நாட்டின் அறிமுக இயக்குநர் ஸ்ரீபதி இயக்கிய '800' திரைப்படம் வெளியாகியுள்ளது.







கடந்த புதன்கிழமை மாலை இந்த படத்தில் பணியாற்றிய இலங்கை கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் முத்தையா முரளிதரன் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது எழுப்பப்பட்ட சில கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் பகிர்ந்துகொண்ட விடயங்களில் சிறு பகுதி –

1995இல் மக்களின் ஆதரவு : 'ஜாதி, மதம், இனம் பார்க்காமல் என்னை ஆதரித்த இலங்கை மக்கள்'

''800' திரைப்படம் தானாக உருவாக்கப்பட்ட ஒரு படம். அதைவிடுத்து, நானாக சென்று இப்படியொரு படத்தை உருவாக்கும்படி யாரிடமும் கேட்கவில்லை.

எனக்கு 21 வயதிருக்கும்... 1995 இல் நான் இலங்கை கிரிக்கெட் அணியில் இருந்தபோது பெரியளவில் ஆஸ்திரேலியாவிலிருந்து எதிர்ப்புகள் வந்தன. அந்த காலப்பகுதியில் அர்ஜுன ரணதுங்க ஒரு தந்தை போல் என்னை அரவணைத்தார். அதேபோல அணியில் இருந்த அனைவரும் என்னை ஒரு சகோதரனாக நினைத்து அக்கறை காட்டினர். எவரும் நான் தமிழரா, சிங்களவரா, முஸ்லிமா என்றெல்லாம் பார்க்கவில்லை. ஒரு கிரிக்கெட் வீரராகவும் இலங்கையராகவும் தான் பார்த்தனர்.

அன்றைக்கு இலங்கை மக்கள் எல்லோரும் ஜாதி, மதம், இனம் பார்க்காமல் எனக்கு ஆதரவளித்தனர். மக்களினதும் அர்ஜுனவினதும் ஆதரவு கிடைக்காமல் போயிருந்தால், இன்று என்னால் இப்படி பேசிக்கொண்டிருக்க முடியாது.

எந்தவொரு விடயத்திலும், தனி நபரால் சாதித்துவிட முடியாது. அவ்வாறு தனித்து சாதித்தேன் என்று யாராவது சொன்னால், அது பொய். ஏனென்றால், நாம் மக்கள் மத்தியில் வாழ்பவர்கள். மக்களின் ஆதரவு நமக்குத் தேவை.

1995 காலப்பகுதியில் இலங்கையில் யுத்தம் நடைபெற்றபோது மக்கள் வாழ்வதற்கு கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டனர். அவர்களுக்கு இருந்த சிரமங்களையும் கருத்திற்கொள்ளாமல் அப்போதும் கூட மக்கள் எனக்கு ஆதரவளித்தனர். அதற்கு நன்றிக்கடனாக, மக்களுக்கு உதவிகள் செய்யும் நோக்கத்தில் மூன்று வருடங்கள் கழித்து, 1998இல் நற்குண மன்றத்தை ஆரம்பித்தோம்.

கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏழை மாணவர்களுக்கு கல்வி மற்றும் பிற உதவிகளைச் செய்துவந்தோம். சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெற்கில் ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுத்தோம். வடக்கு பகுதிகளுக்கு எங்களால் செல்ல முடியவில்லை.

எனினும், நான் உணவுத் தூதுவராக இருந்தபோது வடக்கிற்கும் சென்று அங்குள்ள மக்களின் நிலைமையைக் கண்டறிந்துள்ளேன். 800 இல் இலங்கை கலைஞர்கள். 'நமது கலைஞர்களின் பங்களிப்பு மிகப்பெரிது!'

''800' படத்தில் இலங்கை கலைஞர்கள் பலர் நடித்திருக்கிறார்கள். சிலருக்கான காட்சிகள் குறைவாக இருப்பதால் அதில் அவர்களது தனித்துவமான நடிப்புத் திறமையை சரிவர வெளிப்படுத்த முடியாமலும் போயிருக்கலாம். எனினும், இந்தப் படத்தில் நமது கலைஞர்களின் பங்களிப்பு மிகப் பெரிது.

இந்த படத்தைப் பாகுபாடு பார்க்காமல் பாருங்கள். ஏனென்றால், ஒரு மனிதன் வாழ்க்கையில் சந்திக்கும் இன்னல்கள், அதை அவன் எப்படி எதிர்கொள்கிறான் என்பதை இந்த படத்தில் காட்டியிருக்கிறார்கள்.

இது வெறுமனே கிரிக்கெட் படம் அல்ல. விளையாட்டு, கிரிக்கெட் சார்ந்த ஒரு படமாக இருந்தாலும், நமது நாட்டின் அப்போதைய நிலைமை என்ன என்பதை எனது பார்வையில் பட்டதை, உண்மையை, நான் பார்த்தவற்றை படத்தில் காண்பித்துள்ளனர்.

இதில் சில வன்செயல் காட்சிகள் வருகின்றன. ஒருவேளை அவை சிங்கள மக்களைப் பாதிக்கலாம். அதற்காக, அவற்றை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது.

படத்தில் வரும் எந்த காட்சியையும் இந்தியாவில் தணிக்கை செய்யவில்லை. இங்கே சில, நீக்கப்பட்டன. எனினும், இந்தியாவில் காட்சிகள் அகற்றப்படவில்லை. அத்தோடு, சான்றிதழ் வழங்கி படம் அங்கீகரிக்கப்பட்டது.

கோடிக்கணக்கில் உழைக்க வாய்ப்பில்லாவிட்டாலும், விருதுகளை வெல்லக்கூடிய திரைப்படமாக '800' காணப்படுகிறது.

'800' இறுதிக் காட்சி : 'என்னை அறியாமலேயே கண்ணீர் வந்துவிட்டது'

'எல்லா காட்சிகளும் அருமை. கடைசிக் காட்சியில் இனி டெஸ்ட் மெட்ச் விளையாடத் தேவையில்லை என்கிற அளவுக்கு 800ஐ நிறைவு செய்த உணர்வு எழுந்தது. நான் எளிதில் அழமாட்டேன். நான் மிக வலிமையான ஒருவர். என்றாலும், அந்த நொடியில் என்னை அறியாமலேயே கண்ணீர் வந்துவிட்டது. அந்த காட்சியை மதுர் மிட்டல் அருமையாக தன் நடிப்பில் வெளிப்படுத்தியிருந்தார்.

எதிர்கொண்ட விமர்சனங்கள் : 'யோசிக்காமல் எதையாவது சொல்லி விடுவேன்... நானும் மனிதன்தானே!'

நான் விளையாட்டிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரே விமர்சனங்களை எதிர்கொண்டேன். அதற்கு முன் எந்த விமர்சனமும் இருக்கவில்லை. நான் யார் சார்பாகவும் பேசுவதில்லை. பிரபலமானவர் என்பதால் என்னை யார் அழைத்தாலும், போய்த்தான் ஆகவேண்டும். மறுக்க முடியாது.

நான் ஒளிவுமறைவு இல்லாமல் பேசுபவன். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அவ்வப்போது மன நிலைகள் மாறும்போது, உணர்வுகளும் மாறிமாறி வெளிப்படவே செய்யும். அத்தகைய தருணங்களில் யாரேனும் என்னிடம் கேள்வி கேட்டால், யோசிக்காமல் எதையாவது சொல்லி விடுவேன். நானும் மனிதன்தானே! நானும் பிழை செய்யலாமல்லவா! ஆனாலும், மறுநாளே அது பிழை என உணர்ந்துவிடக்கூடிய பக்குவத்தை ஹொஸ்டல் வாழ்க்கை எனக்கு கற்றுத் தந்துள்ளது.

மலையகமும் கிரிக்கெட் விருத்தியும் 'நாம் உதவிகளை வழங்க மலையக அரசியல்வாதிகள் அனுமதிப்பவர்களல்லர்...'

'மலையகத்தில் ஒரு தனிநபரால் எதையும் செய்துவிட முடியாது. அதுவும் அரசியல் தொடர்பின்றி எதுவும் செய்ய முடியாது. நானும் நிறையப் பார்த்துவிட்டேன்.

எமது நான்கு சேவை நிலையங்களின் மூலமாகவும் கிரிக்கெட், விளையாட்டுத்துறை சார்ந்ததாக அன்றி, கல்வி மற்றும் ஏனைய தேவைகளைக் கருத்திற்கொண்டு உதவிகளை செய்து வருகிறோம்.

ஆனால், நாம் விளையாட்டுத்துறை சார்ந்தோ அல்லது வேறெந்த விடயங்களிலோ உதவிகளை வழங்க மலையக அரசியல்வாதிகள் அனுமதிப்பவர்களல்லர்.

ஒரு மைதானத்தில் எதைச் செய்வது என்றாலும், அங்குள்ள அரசியல்வாதிகள் மற்றும் பாடசாலைகளின் கல்விப் பணிப்பாளர்களினது அனுமதி வேண்டும். எனினும், அவர்களின் அனுமதி கிடைக்காது. அனுமதி பெறுவதும் மிகக் கடினம்.

பாடசாலை கல்விப் பணிப்பாளர்களும் அரசியலோடு தொடர்புபட்டவர்களே!

மைதானங்கள் மாநகர சபைக்கு சொந்தமானவை. மாநகர சபை அரசுக்கு சொந்தமானது. ஆகவே, அந்த மைதானங்களில் எதை செய்வதற்கும் அனுமதி கிடைப்பதில்லை. நாங்களும் முயற்சி செய்து பார்த்துவிட்டோம்.

நுவரெலியா, குதிரை பந்தயத் திடலில் கூட முயற்சி செய்து பார்த்தோம். அதற்கும் அனுமதி கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு நாங்கள் விக்கெட் செய்துகொடுத்தோம். அவ்வாறே நாடெங்கிலும் 60 ஃ 80 சிமெண்ட் விக்கெட்களை செய்து கொடுத்துள்ளோம். இதுபோன்று மலையகத்தில் செய்வதற்கு எங்களுக்கு அனுமதி கிடைப்பதில்லை.

ஆகவே, தனிநபராக சென்று உதவிகளை செய்ய முடியாவிட்டாலும், மன்றத்தினூடாக உதவித்திட்டங்களை முன்னெடுக்க முடியும். ஆகவே, மலையகத்தில் உள்ள திறமையான கிரிக்கெட் வீரர்கள் நற்குண மன்றத்துடன் தொடர்புகொண்டால் நிச்சயம் வாய்ப்புகள் வழங்கப்படும்.

இளம் கிரிக்கெட் வீரர்களின் மனநிலை : 'கோச் சொல்வதை இன்றைய பிள்ளைகள் கேட்பதில்லை...'

'ஒரு கிரிக்கெட் வீரரை உருவாக்க எனக்குத் தெரியாது...'

நான் தற்போது ஹைதராபாத் சன்ரைசஸ் அணியில் பயிற்சியாளராக உள்ளேன். நாங்கள் அன்றைக்கு வளர்ந்த சூழ்நிலை வேறு. இப்போதைய பிள்ளைகள் வளரும் சூழல் வேறு. நாங்கள் ஆசிரியருக்கு பயந்து கற்றோம். ஆனால், இன்றைய பிள்ளைகளுக்கு பயமே இல்லை. பிள்ளைகளை ஆசிரியர்கள் தொடவே முடியாதபடி விதிமுறைகள் உள்ளன.

கிரிக்கெட்டிலும் இதுதான் நிலைமை. பயிற்சியாளர் (கோச்) சொல்வதை இன்றைய பிள்ளைகள் கேட்பதில்லை.

அதைப்போல நான் சொல்வதையும் கிரிக்கெட் பயிலும் இளையவர்கள் கேட்பதில்லை. இந்தியாவில் சிலர் என்னிடம் வந்து அறிவுரை கேட்டாலும், இலங்கையில் அவ்வாறில்லை.

நான் பேசுகின்றமை சமூக ஊடகங்களில் பதிவிடப்படும்போது, என்னை தகாத வார்த்தைகளால் திட்டித் தீர்க்கிறார்கள்.

ஒருவரை பிடித்துவிட்டால் போற்றுவதும், பிடிக்காவிட்டால் திட்டித்தீர்ப்பதுமான நிலைமைக்கு சமூக ஊடகங்கள் வந்துவிட்டன.

அத்தோடு, இன்றைய இளம் கிரிக்கெட் வீரர்கள் சமூக வலைத்தளங்களில் தமக்கு வரும் லைக்குகள் , புகழ்ச்சிகளை பற்றி மட்டுமே சிந்தித்து, தமது திறமைகளை வளர்த்துக்கொள்ளவும், அவற்றை வெளிப்படுத்தவும் தவறிவிடுகிறார்கள். இந்த நிலையை எப்படி மாற்றுவது என்றே எனக்குத் தெரியவில்லை.

தற்போது நிறைய கிரிக்கெட் பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள். எனது பயிற்சியாளர்கள் என்னை ஒரு கிரிக்கெட் வீரராக்கியமை போல, என்னால் அடுத்ததொரு கிரிக்கெட் வீரரை உருவாக்க முடியாது. காரணம், முறையான பயிற்சியளித்து ஒரு கிரிக்கெட் வீரரை உருவாக்க எனக்குத் தெரியாது என்பதே உண்மை.

இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு சிறு அறிவுரை : 'சிறிய கிளப்களில் இணைந்து விளையாடினால் வாய்ப்புகள் வரும்...'

'சிறிய கழகங்களில் இணைந்து விளையாடினால் நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். நிறைய போட்டிகளில் பங்குபற்ற முடியும். அதன் மூலம் உங்கள் பெயர் வெளியே தெரியவரும்.

பிரச்சினைகளை எதிர்கொள்வது எப்படி? முரளிதரன் மொழிகள் : 'இன்னல்களை எதிர்க்கும் சக்தி, விடாமுயற்சி வேண்டும்...'

வாழ்க்கையில் பிரச்சினைகள், இன்னல்கள் மாறிமாறி வந்துகொண்டேதான் இருக்கும். அதை நினைத்து கவலைப்படாமல், பிரச்சினைகளை எதிர்த்து, அவற்றை கடந்து வரவேண்டும்.

அமைதியாகவும் நிதானமாகவும் இருக்க வேண்டும். அவசரத்திலும் குழப்பத்திலும் இருக்கும்போது எந்தவொரு முடிவையும் எடுக்கக்கூடாது. சற்றே அமைதியான மனநிலைக்கு திரும்பிய பின்னரே முடிவெடுக்க வேண்டும். எந்த இன்னலையும் எதிர்க்கும் சக்தி, விடாமுயற்சி வேண்டும்.

எப்போதும் வாழ்க்கையில் வெற்றி பெற்றுக்கொண்டே இருக்க முடியாது. தோல்விகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனூடாகவே தோல்விகளை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பதை கற்றுக்கொள்ள முடியும்.

நான், 19 வயதுக்குட்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் சேர்வதற்கே நான்கு வருடங்களானது. ஆனாலும், நான் என் முயற்சியைக் கைவிடவில்லை.

பாடசாலைகள் கிரிக்கெட் போட்டியில் விளையாட என்றைக்காவது எனக்கொரு வாய்ப்பு கிடைக்கும் என்று காத்திருந்தேன்.

வருடங்கள், காலங்கள் கடந்தாலும் முயற்சிப்பதை நிறுத்திவிடக்கூடாது...' என வருடங்கள் கடந்தும் தன்னம்பிக்கை குறையாமல் இளையோருக்கு உற்சாகமூட்டும் வகையில் கூறினார். (05)

# இரண்டு கிரகணங்கள் இந்த மாதம் நிகழும்!

இம்மாதம் இரண்டு கிரணங்கள் நிகழவுள்ளன. அதில் சூரிய கிரகணம் இலங்கைக்கு தென்படாத நிலையில், சந்திர கிரகணம் மட்டும் தென்படும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியலாளரும், விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளருமான பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார். அதன்படி, ஒக்ரோபர் 14 ஆம் திகதி நெருப்பு வளைய சூரிய கிரகணமும், 28 ஆம் திகதி இரவில் பகுதி சந்திர கிரகணம் நிகழவுள்ளன. இந்த நெருப்பு வளைய கிரகணம் அமெரிக்காவில் நன்றாக தெரியும். மெக்சிகோ, மத்திய அமெரிக்கா, கொலம்பியா மற்றும் பிரேசில் பகுதிகளிலும் தென்படும். சூரிய கிரகணம் இலங்கையில் தென்படாது.

இலங்கை நேரப்படி இந்த சூரிய கிரகணம் அமெரிக்காவில் ஒக்ரோபர் 14 ஆம் திகதி இரவு 8.34 மணிக்கு ஆரம்பமாகி பிரேஸில் அருகே ஒக்ரோபர் 15 ஆம் திகதி அதிகாலை 2.25 மணிக்கு முடிவடைகிறது.

வழக்கமாக, இரண்டுவார இடைவெளியில் தொடர்ச்சியாக இரண்டு கிரகணங்கள் நிகழும் எனத் தெரிவித்தார். அதன்படி, 14 நாள்களுக்குப் பிறகு, ஒக்ரோபர் 28 ஆம் திகதி இரவு 11.32 மணி முதல் பகுதி சந்திர கிரகணம் நிகழும். ஒக்ரோபர் 28 ஆம் திகதி மற்றும் ஒக்ரோபர் 29 ஆம் திகதி அதிகாலை 3.56 மணிக்கு முடிவடைகிறது.

இந்த சந்திர கிரகணம் ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்காவின் பெரும்பாலான பகுதி, பசிபிக், அத்திலாந்திக், இந்தியப் பெருங்கடல், ஆர்க்டிக் மற்றும் அந்தாட்டிக்கா ஆகிய நாடுகளில் தென்படும். இந்த கிரகணத்தின் பகுதி நிலை இலங்கைக்கு ஒக்ரோபர் 29 ஆம் திகதி அதிகாலை 1.05 மணி முதல் 2.23 மணி வரை தென்படும். முழு கிரகணம் அதிகாலை 1.44 மணிக்கு இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA




ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

Google Play
App Store



+94 21 222 8358

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# போலிச் செய்திகள், தவறான தகவல்களை கையாள்வதற்கு பிரத்தியேகசட்டம் அவசியம்

## ஆணையாளர் பிரதிபா மஹநாமஹேவா கருத்து

கனேடியபிரதமரால்இலங்கைதொடர்பில் முன்வைக்கப்பட்ட இனப்படுகொலை குற்றச்சாட்டு, பின்னர் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சாலேயே மறுக்கப்பட்டாலும் அது மிகவேகமாகப் பரவிவிட்டதாக சுட்டிக் காட்டியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்முன்னாள்ஆணையாளர் கலாநிதிபிரதிபாமஹநாமஹேவா, தனியுரிமை சார் தகவல்கள் மற்றும் கருத்துச்சுதந்திரம் என்பன பாதுகாக்கப்படும் அதேவேளை போலியானதும்தவறானதுமானதகவல்களை உரியவாறு கையாள்வதற்கான பிரத்யேக சட்டம் உருவாக்கப்படவேண்டும் எனத் தெரி வித்துள்ளார்.

தெற்காசிய சிந்தனைக் குழாம்களின் ஒன்றியத்துடன் இணைந்து தேசிய சமாதானப்பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சர்வதேச தொடர்புகளில் போலிச்செய்தி, தவறான தகவல் மற்றும் பரப்புரை' எனும் புத்தக வெளியீட்டு நிகழ்வு கொழும்பிலுள்ள ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 'சர்வதேச தொடர்புகளில் போலிச்செய்தி, தவறான தகவல் மற்றும் பரப்புரைகுறித்தஇலங்கையின்அனுபவங்கள்' என்றதலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குழு ரீதியான கலந்துரையாடலில் பங்கேற்று, கருத்து வெளியிடுகையிலேயே பேராசிரியர் பிரதிபா மஹநாமஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் கடந்த மேமாதம் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட 'இனப்படுகொலை' குற்றச்சாட்டு மற்றும் பிரதமரின் கருத்தை மறுத்ததுடன்'இலங்கையில்இனப்படுகொலை இடம்பெற்றமைக்கானஎவ்விதஆதாரங்களும் இல்லை' என கனேடிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட கருத்து ஆகியவற்றையும், இலங்கையிலுள்ள சுவிற்ஸர்லாந்து தூதரக ஊழியர் கானியா பானிஸ்டர் பிரான்சிஸினால் முன்வைக்கப்பட்ட கடத்தல் குற்றச்சாட்டு மற்றும் அவ்வாறு தவறான குற்றச்சாட்டை முன்வைத்ததாக அவர் மேல்நீதிமன்றத்தில் ஏற்றுக்கொண்டமையையும் தவறான தகவல்களுக்கான உதாரணசம்பவங்களாகக் குறிப்பிட்ட பிரதிபா மஹநாமஹேவா, அவை தவறானதகவல்கள் என நிரூபணமாவதற்கு முன்பதாகவே பொதுவெளியில் வேகமாகப் பரவிவிட்டதாக சுட்டிக்காட்டினார்.

எனவே இத்தகைய தவறான தகவல்கள், போலிச்செய்திகளைக் கையாள்வதற்கு இலங்கைக்கென பிரத்தியேகமானதொரு சட்டம் அவசியம் எனவும், இருப்பினும் அந்தச்சட்டம் தகவல் அறியும் உரிமை மற்றும் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அமையவேண்டும் எனவும் வலியுறுத்திய அவர், தவறான தகவல்கள் மற்றும் போலிச்செய்திகளைக் கையாள்வதற்கு சர்வதேச நாடுகள் பலவற்றிலும் நடைமுறையில் உள்ள சட்டங்களை மேற்கோள் காண்பித்தார்.

'தற்போது நடைபெற்றுவரும் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் ஹமாஸ் உறுப்பினர்கள் அனைவரும் கொல்லப்படுவர் என்று இஸ்ரேலிய பிரதமர் கூறுகின்றார். இவ்வாறானதொரு கருத்தை இலங்கையின் தலைவர்கூறியிருந்தால்என்னநேர்ந்திருக்கும்? இது மனித உரிமை மீறல் என சர்வதேச மட்டத்தில் கண்டனங்கள் எழுந்திருக்கும். ஆனால் இவ்வாறு கூறுகின்றமை இஸ்ரேல் என்பதால் எதுவும் நடக்கவில்லை. ஆகவே இவ்விடயத்தில் சர்வதேச அரசியல் எவ்வாறு இயங்குகிறது என்றும் பார்க்கவேண்டும்' என பிரதிபா மஹநாமஹேவா சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று 'விக்கிலீக்ஸ்' ஜூலியன் அஸாஞ்சே, எட்வேட்ஸ்னோடன் ஆகியோரால் சர்ச்சைக்குரிய உண்மைகள் வெளியிடப்பட்ட சம்பவத்தை மேற்கோள்காட்டிய அவர், உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டிய அதேவேளை தனியுரிமைசார் தகவல்கள் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

மேலும், 'உத்தேச நிகழ்நிலைக் காப்பு சட்டமூலத்தின்கீழ் பிரத்தி யேக ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமா? அல்லது சமூகவலைத்தளப் பயன்பாடு குறித்த வழிகாட்டல்கள் உருவாக்கப்படவேண்டுமா? என்பது பற்றி நாம் சிந்திக்கவேண்டும். அண்மைய காலங்களில் சமூகவலைத்தளங்களில் பல்வேறு நிதித்திட்டங்கள் தொடர்பான பொய்யான தகவல்கள் வெளியாகிவருவதுடன், அவற்றின் மூலம் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். எனவே தனியுரிமைசார் தகவல் மற்றும்



கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் என்பன பாதுகாக்கப்படுவதைப்போன்று தவறான தகவல்களால் பாதிக்கப்படும் தரப்பினரும் பாதுகாக்கப்படவேண்டும்' என்றும் பிரதிபா மஹநாமஹேவா தெரிவித்தார்.

அத்தோடு, அண்மையில் 'சனல்-4' செய்திச்சேவையால் உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட காணொளியின் உள்ளடக்கம் குறித்து மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே பிரித்தானிய ஊடகஒழுங்குபடுத்தல்சபையிடம் முறைப்பாடு அளித்திருக்கிறார் எனவும், அதன் மூலம் இதுபற்றி விசாரணைகள் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (05)

# இஸ்ரேல் - ஹமாஸ் போரால் உலக அமைதி சீர்குலைவு!

## ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கும்போரால் உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான என். ஸ்ரீகாந்தா தெரி வித்துள்ளார்.

என். ஸ்ரீகாந்தா ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் -

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்திற்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் போரில், காசா பிரதேசத்தில் வாழும் பலஸ்தீன மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் வருகையில், அப்பிரதேசம் தண்ணீர் மற்றும் மின்சாரமின்றி திணறிக் கொண்டிருக்கின்றனர்.

மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி ஒன்று, காசாவில் ஏற்பட்டிருக்கும் நிலையில், இஸ்ரேல் நாட் டிலும் பொதுமக்களின் உயிரி ழப்புக்களும் பாதிப்புக்களும் உயர்ந்து வருகின்றன.

இப்பொழுது நடைபெறுவது இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்திற்கும், பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஹமாஸ் இயக்கத்தின் பயங்கரவாதத்திற்கும் இடையிலான போர் என்பதே உண்மையானது.

இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்கிய ஹமாஸின் போர் நடவடிக்கையை சாட்டாக வைத்து, அதன் கட்டுப்பாட்டில் உள்ள காசா பிரதேசத்தையே தரைமட்டமாக்கி, இரு துண்டுகளாக அமைந்திருக்கும் பலஸ்தீன மண்ணின் ஒரு துண்டினை ஒட்டுமொத்தமாக விழுங்கிவிடும் இலக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு, அமெரிக்காவும் மற்றும் மேற்குலக நாடுகள் பலவும் உதவிக் கொண்டிருக்கும் நிலைமையில், உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1948 இல் இஸ்ரேலின் தோற்றத்துடன், தமது சொந்த பலஸ்தீன மண்ணிலிருந்து வேட்டையாடி விரட்டப்பட்ட பலஸ்தீன மக்களின் நீதிக்கான நீண்ட போராட்டத்தில், 1993 இல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மத்தியஸ்தத்துடன், இஸ்ரேலிய பிரதமர் யிற்சாக் றபினுக்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத்துக்கும் இடையில் கையெழுத்தான சமாதான ஒப்பந்தம், பலஸ்தீன மண்ணில், யூதர்களுக்கு இஸ்ரேலும், பலஸ்தீனிய அரபுக்களுக்கு பலஸ்தீனமும் என, இரண்டு நாடுகள் அருகருகாக அமைவதற்கு வழிகாட்டி, ஓர் வரலாற்று ஆச்சரியத்தையே நிகழ்த்தியிருந்தது.

ஆனால், படுகொலை செய்யப்பட்ட பிரதமர் இற்சாக் றபினுக்குப் பிறகு, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இஸ்ரேலிய தலைவர்களின் நடவடிக்கைகளால், அந்த சமாதான ஒப்பந்தம் செயல் இழந்து போனதால் ஏற்பட்ட மோதல் சூழ்நிலையின் உச்சக் கட்டமே, இப்போது நடைபெறும் போராகும்.

இந்தப் போரில் தலையிட்டு, போர் நிறுத்தம் ஒன்றை சாதிக்கும் வல்லமை கொண்டுள்ள நாடுகள் எல்லாம், இஸ்ரேலின் பக்கமே இப்போது சாய்ந்து



# முதிரை மரக் குற்றிகளை ஏற்றி வந்த பட்டாரக வாகனத்துடன் சாரதி கைது!

மாங்குளத்தில் இருந்து பட்டாரக வாகனம் ஒன்றில் முதிரை குற்றிகளை தேங்காய் பொச்சுக்களால் மறைத்து கடத்த முற்பட்ட வட்டுகோட்டையை சேர்ந்த 28 வயதுடைய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது மூன்று லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# 17 வயதுச் சிறுமி மீது துஸ்பிரயோகம் மன்னாரில் மூவர் அதிரடியாக கைது!

மன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில், 17 வயதுடைய சிறுமி ஒருவரை மூவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளார்கள்.

இந்நிலையில், இது குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த மூவரும் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பெரிய கமம் பகுதியை சேர்ந்த 23,18 மற்றும் 17 வயதுடையவர்களே மேற்படி சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூன்று நபர்களும் சிறுமியின் நிர்வாண புகைப்படத்தைவைத்திருந்ததோடு அந்தப் புகைப்படத்தை நண்பர்களிடமும் பரிமாறி கொண்டுள்ளனர்.

அந்தப் புகை படங்களை வைத்து சிறுமியை மிரட்டி துஷ்பிரயோக சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அதேநேரம், சம்பவத்தின் பிரதான குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் வாகன திருத்தகம் ஒன்றில் பணிபுரியும் 23 வயதுடைய நபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததுடன் அவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபா பணத்தையும் வலுக்ககட்டாயமாக அபகரித்து சென்றுள்ளார்.



இந்நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரின் தாயார் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மன்னார் பொலிஸார் குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், குறித்த மூவரும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்கநீதிவான் உத்தரவிட்டுள்ளார். (05)

# வேகமாக பரவி வரும் கண் நோய்: மீண்டும் ஒரு பாடசாலைக்கு பூட்டு!

கண் நோய் பரவி வருவதால் யட்டியந்தோட்டை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 5 ஆம் தர வகுப்பறையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யட்டியாந்தோட்டை சிறிவர்தன மகா வித்தியாலயத்தில் 5ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் கண் நோயை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அப்பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

அந்த வகுப்பறையில் உள்ள 13 மாணவர்களுக்கு கண் நோய் இருக்கின்றமை கண்டறியப்பட்டதையடுத்து, அந்த வகுப்பறையில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் நோய் பரவாமல் தடுக்கவும், மற்ற குழந்தைகளின் உடல்நலம் காக்கவும் விடுமுறை அளிக்க பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு நகரை அண்மித்த பல பிரதேசங்களில் சிறார்களுக்குள் பரவும் கண் நோயொன்று இந்த நாள்களில் பதிவாகி வருகின்ற போதிலும், அது தொடர்பில் தேவையற்ற அச்சம் தேவையில்லை என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், நோய் அறிகுறிகளுடன் கூடிய குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்க்க பெற்றோர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சுகாதாரத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.10.2023இல் வெளியிடப்பெற்றது.